[1978 மார்ச் 28]

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் புகார் புத்தகத்தில் எழுதக்கூடிய புகார்கள் சம்மந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் திருச்சி பேருந்து நிலையத்தில் ஒரு புகார் புத்தகத்தில் எழுதி யிருந்தேன். அதற்கு, அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று இதுவரையில் தெரியவில்லை. எனக்கு அதுபற்றி தகவல் வரவவில்லை. பொதுமக்களால் எழுதப்படுகிற புகார் களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அவர்களுக்கு எழுதுவதோடுகூட உடனடியாக இது சம்மந்தமான நடவடிக்கைகள் எடுக்க என்ன அமைப்புகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை நல்ல ஆலோசனை. புகார் எழுதுகிற பொதுமக்களுக்கு, நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் தகவல் அனுப்புகிற முறை கடைப்பிடிக்கப்படும்.

பேருந்துகளில் மாணவர்களுக்கு சலுகைக்கட்டணங்கள்.

*695 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகை அளிக்கப்பட்டதால் சென்னை நகரில் மட்டும் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரித்தால் மேலும் எவ்வளவு இழப்பு ஏற்படும்?

(இ) சென்னை நகரில் பஸ் போக்குவரத்து ஊழியர்களின் குழந்தைகளுக்கு பஸ் கட்டண சலுகை அளித்ததால் ஏற்பட்டுள்ள இழப்பென்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) நடப்பு பள்ளி ஆண்டில் அதாவது ஜூலை— ஆகஸ்டு 1977 முதல் மார்ச்—ஏப்ரல் 1978 முடிய ஏற்படும் இழப்பு ரூ. 1,62,27,687.05 ஆகும்.

(ஆ) இச்சலுகையினை மாவட்டத்திலுள்ள எத்தனை மாணவர்கள் பயன்படுத்துவர் என துல்லியமாக நிர்ணயிக்க வாய்ப்பில்லாத போதும் சென்னை நீங்கலான அனைத்து

மாவட்டங்களிலும் இருக்கும் 19,65,393 மாணவர்கட்கும் இச்சலுகை நீடிக்கப்படுமாயின் மாதம் ஒன்றுக்கு தோராயமாக 5·25 கோடி இழப்பும், ஆண்டுக்கு தோராயமாக 63 கோடி ரூபாய் இழப்பும் ஏற்படும்.

(இ) நடப்பு ஆண்டுக்கு ஏற்படும் இழப்பு ரூ. 2,75,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு முழு ஆண்டிற்கு இழப்பு ரூ. 4 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : சென்னையிலே இந்தச் சலுகை மாணவர்களுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது, அனுபவிக்கிறார்கள். அதேநேரத்தில் மாவட்டங்களில் மாணவர்கள் இந்தக் கோரிக்கையைக் கேட்டு அவர்கள் நடத்திய பல போராட்டங்களும், மாவட்ட அதிகாரிகள் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்து அது நிறைவேற்றப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? குறிப்பாக கோவையில் அரசாங்கக் கலைக்கல்லூரி மாணவர்களும் மற்றக் கல்லூரி மாணவர்களும் போராடிய காலத்தில் அவர்களுக்கு சலுகைக் கட்டண ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைசெய்து அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப் படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள்?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்டேன், சென்னை மாநகரத்தில் மட்டும், இந்த சலுகை கொடுப்பதால், மாதம் ஒன்றுக்கு 29 இலட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு சென்னை மாநகரத்தில் மட்டும் ஐந்து கோடி 25 லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த சலுகையை அளித்தால் ஆண்டு ஒன்றுக்கு 63 கோடி கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். அதற்கு அரசிலும் நிதி யில்லை. போக்குவரத்துக் கழகங்களிடமும் நிதி இல்லை. ஆகவே, மாவட்டங்களுக்கு இந்தச் சலுகை நீட்டிக்கப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களுக்கு இந்த சலுகை கொடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப்பிரதேசத்திற்கு மட்டும், அங்குள்ள ஏழை மாணவர்களுக்கு இந்த சலுகை கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு சலுகை அமலில் இருந்து வருகிறது.

1978 மார்ச் 28]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இந்த சலுகை பாஸ் வழங்குகின்ற நேரத்தில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கின்ற வகையில்—முன்னால் மகளிர்க்கு என்று தனியாக குறிப்பிட்ட நேரத்தில் பஸ்கள் விடப்பட்டுக்கொண்டிருந்தன. அதே போன்று காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் கல்லூரிகள், பஸ்கள் ஆரம்பிக்கின்ற நேரத்திலும் மாலையில் விடுகின்ற நேரத்திலும் மாணவர்களுக்கு என்று தனியாக பேருந்துகள் விட்டால் பிரச்னையை சமாளிக்க முடியும், அவர்களுக்கும் வசதியாக இருக்கும். இதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மாணவிகளுக்கு தனியாக பேருந்துகள் விடப்படுகின்றன. மாணவர்கள் பொதுப் பேருந்துகளில் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : சென்னை மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற 15 ரூபாய் பாஸ் வழங்கியிருப்பதால் மாணவர்களிடையே இது படிப்பையும் ஒழுக்கத்தையும் வளர்க்க பயன் பட்டிருக்கிறதா என்பதையும் பொதுமக்களுக்கு இதனால் தீமைகள் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இந்த பாஸ் வழங்கியிருப்பதன் நோக்கம் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்பதற்காக அல்ல. நூலகங்களுக்கு செல்ல வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு தான் வழங்கப்பட்டது. ஆனால், இதை மாணவர்கள் நூலகங்களுக்குச் செல்வதற்கு என்று பயன்படுத்துவதில்லை என்றும் இதை மிகையாக பயன்படுத்துகிறார்கள் என்றும் இதனால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன என்று பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. அரசு அவற்றைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, சென்னை மாநகரத்தில் மட்டும் இந்த சலுகை அளித்ததில் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரித்தால் மேலும் இழப்பு ஏற்படும் என்றும் ஆகவே, மாவட்டங்களுக்கு இந்தச் சலுகை விஸ்தரிக்கப்படமாட்டாது என்றும் சொன்னார்கள். வசதியில்லாத மாணவர்கள் கிராமங்களில் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே இங்குள்ள மாணவர்களுக்கும் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கும் பாகு

பாடு காட்டப்படாமல் இதே சலுகை ஏன் மற்ற பகுதிகளுக்கும் தரக்கூடாது? இந்த பாகுபாடு ஏன் காட்டப்படுகிறது? அதே நேரத்தில் தனியார் பேருந்துகளிலும் மாணவர்கள் செல்வதற்கு இந்த பாஸ் முறை வழங்குவதற்கு அரசாங்கம் ஜி.ஓ. மூலம் ஏதாவது ஆணைகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்தால் ஆண்டு தோறும் 63 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும். இதை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. அதனால்தான் இதை பரிசீலிக்க முடியவில்லை. அடுத்தது, தனியார் பேருந்துகளில் இது அனுமதிக்க முடியுமா என்பதற்கு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னைக்கே இடமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: சென்னை மாநகரத்திற்கு மட்டும் தான் இந்த சலுகை கொடுக்கப்படும் என்றும், மற்ற மாவட்டங்களுக்கு இது விஸ்தரிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவே ஒரு புதிய பிரச்னையை கிளப்பிவிட்டுவிடும் என்பது அரசுக்கு தெரியாதா? சென்னை மாநகரத்திலுள்ள மாணவர்களையும் மற்ற மாவட்ட தலைநகரங்களிலுள்ள மாணவர்களையும் இரண்டு விதமாக நடத்த முடியாது. ஆகவே, சில குறிப்பிட்ட காரணங்களைச் சொல்லி பெரிய மாவட்ட தலைநகரங்களில் மட்டுமாவது மாணவர்கள் குவிந்துள்ள அந்த இடங்களில் மட்டுமாவது இந்த சலுகையை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மாணவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை அளித்து, மற்ற மாவட்டங்களிலே உள்ள மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்காமல் இருப்பது பாரபட்சம் காட்டுவதாக இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இதனால் பிரச்னை உருவாகாதா என்றும் கூறுகிறார்கள். இந்தப் பிரச்னையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.